324

வ்யய வருஷ ஆடி மீ

ஸம்புடம் - 5
ஸஞ்சிகை - 7

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

வர்ஷச் சந்தா : ரூபா 3—0—0

July, 1946
Vol. 5, No. 7

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

		பக்கம்
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	150
2.	ஸ்ரீ குலசேகரப்பெருமாள் ராமாயணம்	156
3,	வேதாந்த விஷயமான ஒரு ஸந்தேஹத்துக்கு ஸமாதானம்	159
4.	செய்தி	160
5.	ஸம்பாதகரின் குறிப்புக்கள் ...	161

ஸ்ரீ:

ரஹஸ்யார்த்தங்களை அறிவதில் சில தோஷங்கள்

ஆத்மோஜ்ஜீவநத்திற்காக அபேக்ஷிதங்களான ரஹஸ்யார்த்தங்களை அறிவதில், (1) அஜ்ஞாநம், (2) ஸம்ஶயம், (3) விபர்யயம், (4) விபரீதருசி என்று நான்கு வித தோஷங்கள் நேரக்கூடும். இவை புகாதபடி இவைகளை அறிந்துகொள்ள வேண்டியது அவச்யம்.

(1) கொஞ்சமேனும் அறியாமல் இருப்பது "அஜ்ஞாநம்." ஆத்ம வஸ்து ஒன்று உண்டு என்னும் நினைவே இராமல் இருப்பது இந்தத் தோஷமாகும்.

(2) விருத்தங்களான இரண்டு தர்மங்களை ஒரே வஸ்துவினிடம் ஆரோபித்து, வஸ்து இதுவோ? அதுவோ? என்று ஸந்தேஹிப்பது 'ஸம்ஶயம்.' இருட்டில் ஸ்தூலமாகத் தென்படும் ஒரு வஸ்துவைப் பார்த்து, இது மரமோ? மனிதனோ? என்று ஸந்தேஹிப்பது இந்தத் தோஷம். 'ஆத்ம வஸ்து ஒன்று உண்டு; ஆனால் அது ஸ்வதந்த்ரமா? பரதந்த்ரமா? என்பது ஏற்படவில்லை சில ஹேதுக்களைப் பார்த்தால் அது ஸ்வதந்த்ர மென்றும், மற்றும் சில ஹேதுக்களைப் பார்த்தால் அது பரதந்த்ர மென்றும் தெரிகின்றது' என்று எவன் ஸந்தேஹப்பட்டுக் கொண்டே இருக்கிறானோ, அவன் இந்தத் தோஷத்திற்குப் பாத்ரமாகிறான்.

(3) உண்மையோ நிச்சயமாகத் தெரியவில்லை; ஆனால் சில தவறுதலான ஹேதுக்களைக் கொண்டு அதை மாறாக நிச்சயிப்பது 'விபர்யயம்.' இருட்டில் தென்படும் மரத்தை மனிதன் என்றே நிச்சயிப்பது இந்தத் தோஷம். சில ஹேத்வாபாஸங்களைக் கொண்டு 'தேஹமே ஆத்மா' என்று நிச்சயித்தால் அது இந்தத் தோஷமாகும்.

(4) உண்மை தெரியும்; ஆனால் அதை விபரீதமாகச் சொல்வதில் ஒரு ருசி சிலருக்கு உண்டாகலாம். அதுதான் 'விபரீத ருசி.' ஒருவனிட மிருக்கும் நற்குணங்களை 'அவை நற்குணங்களே' என்று அறிந்திருந்தும், அவைகளைத் தோஷங்களாகப் பேசுவது இந்தத் தோஷம். ஆத்ம வஸ்து பகவானுக்கு ஶேஷ பூதம் என்று ஶாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன வென்பதை அறிந்தும், அது அப்படி ஶேஷமன்று என்பதை ஸ்தாபிப்பதில் ஒரு ருசியுடன் ப்ரவர்த்தித்தால் அது விபரீத ருசியின் கார்யமே.

இம்மாதிரியான தோஷமுள்ளவர்களையே, (1) மூடர்கள், (2) நராதமர்கள் (3) மாயையால் அபஹ்ருத ஜ்ஞாநர்கள், (4) ஆஸுர பாவத்தை அடைந்தவர்கள் என்று ஸ்ரீ கீதாசார்யன் விபஜித்திருக்கிறான்.

ஸம்பாதகர்.



ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 5	வ்யய ௵ ஆடி ௴	ஸஞ்சிகை 7

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

வ்யய ௵ ஆடி ௴

1௳ செவ்வாய்க்கிழமை ... ஶூந்ய திதி; தக்ஷிணாயந புண்ய காலம்; கடகரவி—21-9. ஆடிப் பண்டிகை.

2௳ புதன்கிழமை ... ஶூந்ய திதி

3௳ வியாழக்கிழமை ... கடக க்ருஷ்ண சதுர்த்தி திதி

4௳ வெள்ளிக்கிழமை ... பஞ்சமி - ஷஷ்டி திதி த்வயம்.

5௳ சனிக்கிழமை ... ஸப்தமி திதி.

10௳ வியாழக்கிழமை ... ஸ்ரீ வைஷ்ணவேகாதஶி (வ்ரதம்)

13௳ ஞாயிற்றுகிழமை ... ஸர்வ அமாவாஸ்யை.

16௳ புதன்கிழமை ... த்ருதீயை - சதுர்த்தி திதி த்வயம் திருவாடிப் பூரம்.

17௳ வியாழக்கிழமை ... பஞ்சமி திதி

18௳ வெள்ளிக்கிழமை ... ஷஷ்டி திதி; பதினெட்டாம் பெருக்கு.

19௳ சனிக்கிழமை ... அதிதி

20௳ ஞாயிற்றுக்கிழமை ... ஸப்தமி திதி.

24௳ வியாழக்கிழமை ... ஸர்வ ஏகாதஶி.

28௳ திங்கட்கிழமை ... பௌர்ணமி திதி : ருக் - யஜுருபாகர்மம்.

29௳ செவ்வாய்க்கிழமை ... காயத்ரீ ஜபம்,

30௳ புதன்கிழமை ... கடக க்ருஷ்ண த்விதீயை திதி.

31௳ வியாழக்கிழமை ... கடக க்ருஷ்ண த்ருதீயை திதி.

32௳ வெள்ளிக்கிழமை ... ஶூந்ய திதி; ஸிம்ஹ ரவி 49-21.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[6-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி M. A., B. L., அட்வோகேட், திருச்சி.]

விவேகர்:— ஸாரதியே! ஜீவன் இப்பொழுது இந்த்ரியங்களை அடக்கித் தன் வசமாக்கியிருக்கிறான். இனிமேல் தாரணை த்யானம் முதலிய பக்தி யோகாப்யாஸத்துக்குத் தக்க ஸாதநத்தைக் கண்டுபிடிக்க, மேருமலையின் சிகரத்தில் வந்திருக்கிறோம். இந்தப் பொன்மலை ப்ரதேசம் காம காமிகளுக்கே இன்புறும் விளையாட்டு ஸ்தலம். போகவர்த்தகமான இந்த வர்ஷங்களை விட்டு விட்டு, மோக்ஷம் உட்பட எல்லா புருஷார்த்தங்களையும் தேட யோக்யமான பாரத வர்ஷத்தை நோக்கி ரதத்தைத் திருப்பும்.

[தர்க்கன் ரதத்தைத் திருப்புகையில் மந்மதனை ஜயித்த உமாபதியின் வாஸஸ்தாநமான வெள்ளிமலை கண்ணிற் பட, அதைப் பார்த்து விவேகர் சொல்லுகிறார்.]

விவேகர்:— மந்மத சத்ருவான ஈச்வரன் இங்கே வஸிப்பதால், காம பயம் இல்லையே யாயினும், இங்கே காளிந்தீ என்னும் யமுநாநதியின் கருநீர் ப்ரவாஹங்களின் ஓயாத 'சல சல' சப்தத்தால் தாரணை த்யாந ஸமாதி யென்னும் யோக ஸம்யமத்திற்கு மிக்க விக்நமே உள்ளது. ஆதலால் ரதத்தை வேறிடத்திற்கு ஒட்டும்.

தர்க்கன்:— [ரதத்தை இன்னும் முன் ஒட்டி] ஸ்வாமிந்! கந்தர்வ யூதங்கள் விஹரிக்கும் இந்தக் கந்தமாதந பர்வதத்தைப் பார்க்கவேணும். (கந்தர்வ யூத மென்கிறதில் ரஸம் உண்டு. கஜ யூதங்கள் என்று பேசுவர். யானைகள் மதம் பிடித்து யதேஷ்டமாய் ஆணும் பெண்ணுமாய் விஹரிக்கும். அவை போன்றவர் கந்தர்வ மிதுநங்கள்)

விவேகர்:—இங்கே வீசும் காற்று, திவ்யமான வேடுவப் பெண்களின் கூந்தல்களிலுள்ள திவ்ய புஷ்பங்களின் வாஸனைகளையும், மத்த கஜங்களின் மதஜல வாஸனையையும் அடித்துக்கொண்டு வருகிறது.

தர்க்கன்:— இதோ இங்கே திவ்ய தபோவநம் விளங்குகிறதைக் கடாக்ஷிக்கவேணும்.

விவேகர்:— [தூரத்தில் கண்களைச் செலுத்திப் பார்க்க, ஹநுமார் ஸேவை ஸாதிக்க அவரை வர்ணிக்கிறார்.]

“ ஸ்வக்ருத ராவண யுத்த ப்ரபந்த கேளி காயமாநத
ப்ரபந்த ஸித்த யஶஶ்ஶிக்ஷண ப்ரவண ஸித்த வைர சரிதாஶ்ரித: ।
கனத்ரண வ்ரணாங்கித ப்ரதீப்த கனகாசல வீரவர்ண:
கபி: கதலிகாவனம் கனகஶைல ஶ்ருங்கம் ஸஞ்சரதி: ॥

இந்த வாழைகிரி வநத்தில் ஒரு பொன்மலைச் சிகரம் போன்ற வடிவோடு இதோ இங்கே நடந்துவரும் வாநரர் யாரோ? இவர் திருமேனி யெல்லாம் யுத்தக் காயத் தழும்புகள் விளங்குகின்றன. இவர் தாமே இட்டுக் கட்டிய ராம ராவண யுத்த விஷயமான நூற்றுக்கணக்கான பாட்டுக்களைப் பண்ணிசைகளோடு ஶிக்ஷை சொல்லிக்கொள்வதற்காக, ஆவலுடன் கூட்டங் கூட்டமாக ஸித்த கணங்கள் சூழ்ந்துவர, அவர்களுக்குக் காந ஶிக்ஷை சொல்லிக்கொண்டே வருகிறார். [இந்த ச்லோகத்தில் ரஸங்கள் கனத்திருக்கின்றன. மஹாபாரதத்தில் வநபர்வத்தில் 148-முதல் 153-வரையிலுள்ள அத்யாயங்களில், ஹநுமார் கந்தமாதந வநத்தில் ஸித்தர்கள் அப்ஸரஸ்ஸுக்கள் கந்தர்வர்கள் முதலியோர், மஹாவீரனான ராமனுடைய வீர சரிதங்களைக் காநம் செய்துகொண்டு ஹநுமாரை அந்தக் காநத்தால் ரமிக்கச் செய்வதையும், அங்கே அவருக்கும் அவர் தம்பி வாயு புத்ரனான பீமஸேநனுக்கும் ஸமாகமம் உண்டாகி, அவர்களுடைய ஸம்வாதாதிகளையும் வர்ணித்திருக்கிறார். அந்த அத்யாயங்களெல்லாம் அப்படியே ஸ்வாமி நெஞ்சில் ஓடுகின்றன.]

“ தபந்தமிவ தேஜோபி: ஸௌவர்ணமிவ பர்வதம் ।
ப்ரதீப்தமிவ ஆகாஶம் த்ருஷ்ட்வா பீமோ ந்யமீலயத் ॥”

என்று அங்கே விச்வரூப ஹநுமாரைத் தம் காந்தி கிரணங்களால் ஸூர்யனைப் போல் ஜ்வலிப்பவரும், கநக பர்வதம் போன்றவரும், பரந்த அவகாஶமெல்லாம் ஜ்யோதிர் மயமாய் விளங்குவதால் ஜ்வலிக்கும் ஆகாஶம் போன்றவருமாக நிரூபித்துள்ளது. அவருடைய அந்த விசுவ ரூபத்தைப் பார்த்ததும் பீமஸேநன் திடுக்கிட்டுக் கண்களை மூட நேர்ந்தது. பீமனுக்கு பீமம் அந்த ரூபம்.

“ ஸ த்ருஷ்டம் கதலீஷண்டச்சாயாயா நதீதடசாரிபி: ॥ ”

என்றபடி அவர் ஸஞ்சரிக்கு மிடங்களில் வாழை வநங்கள் இருந்தன. அவர் பொற் காந்திகளால் பசுமையான வாழைவநங்களும் பொன் வாழைகள் போல் விளங்கின.

“ ததிஹாப்ஸரஸஸ்தாத கந்தர்வாஶ்ச ஸதாநக ।
தஸ்ய வீரஸ்ய சரிதம் காயந்த்யோ ரமயந்தி மாம் ॥ ”

‘அநக! உம்முடைய இந்தக் கதை உலகத்தில் உள்ளவரையில் நான் ஜீவித்திருக்கும்படி அநுக்ரஹிக்கவேணும்’ என்று ராமனை வரம் யாசித்தேன். ‘ஆஹா, அப்படியே’ என்று என் ஸ்வாமி அருளினார். அவர் தம் வீடு சென்றுவிட்டார். ஆகையால் அநவரத காலமும் இங்கே அப்ஸரஸ்ஸுக்களும்

189223

கந்தர்வர்களும் அந்த ரகுவீர சரிதத்தைப் பாடிக்கொண்டு என்னை ரமிக்கச் செய்கிறார்கள்] என்று ஹநுமார் பீமனிடம் சொல்லுகிறார்.

‘ஸ்வக்லுப்தாநவத்யஸ்வயுத்தப்ரகீதை: ஸ்ரவணாயாஸீத்’

இந்தக் கந்தமாதந பர்வத வநத்தில் ஸித்தர்கள் கந்தர்வர்கள் அப்ஸரஸ்ஸுக்கள் முதலியவரெல்லாம் ஆடிப் பாடி இன்பமாய் விஹரிக்கிறார்கள். ராம கதை தெரிந்தவர் ஹநுமார் ஒருவரே. கதை யென்பது ஒருவருக்குச் சொல்லி, அவர்களைக் கேட்கச் செய்யவேணும்; அல்லது ஒருவர் சொல்லக் கேட்கவேணும். இவர், கதை சொல்லிக் கேட்க அங்கே ஒருவருமில்லை. ஸித்த கந்தர்வாதிகளுக்குக் கதை கேட்க வணங்காது. ஸங்கீதத்திலும் அபிநயாதிகளிலும் நர்த்தநங்களிலும் அவர்கள் நிபுணர்கள். அவர்களுக்குப் புதிது புதிதாகக் கீர்த்தநங்கள் அமைந்து கொண்டே யிருக்கவேணும். ஹநுமாரிலும் சிறந்த கவி ஒருவருமில்லை; அவரினும் சிறந்த கீர்த்தந ரசநாசிரியரு மில்லை. ‘எங்களுக்கு நல்ல கீர்த்தநங்களைக் கல்பித்துக் கொடுக்க வேணும்; அவற்றை பாவ ராக தாளங்களுடன் பரத ஶாஸ்த்ரப்படி அபிநயித்துக் காந ப்ரயோகம் செய்யும்படி எங்களுக்கு ஶிக்ஷித்துக் கொடுக்க வேணும்’ என்று அவர்கள் ஹநுமாரை ப்ரார்த்திக்கிறார்கள்; கூட்டம் கூட்டமாகச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள். ஹநுமார் தாமே ராம ராவண யுத்த வர்ணந கீர்த்தநங்களை அமைத்து, அவற்றைப் பாடும் விதத்தையும் அவர்களுக்கு ஏக காலத்தில் சிக்ஷை சொல்லிக் கொடுக்கிறார். அப்படிச் சொல்லிக் கொடுக்கையில், அவர்கள் இவர் பாடுவதை அநுகரிக்கும் ஶிக்ஷையில் திருப்பிப் பாடுகிறார்கள். அதைக் கேட்டு இவர் ரமிக்கிறார். கீர்த்தநங்களின் சிக்ஷை முடிந்ததும், அவர்கள் முழுக் கீர்த்தநங்களையும் இவர் ஶிக்ஷித்தபடியே பாடுகிறார்கள். தாமே இட்டுக் கட்டிச் சொல்லி வைத்த ஶிக்ஷைப்படியே அவர்கள் ராமன் யுத்த கீர்த்தநங்களை பாடக் கேட்பது தான் இவருக்கு ராம கதா ச்ரவணம். தம் ஶிஷ்யர்கள் தாம் பழக்கி வைத்ததைக் கிளிகள்போல் பாடுவதைக் கேட்பதுதான் இவருக்குக் கதா ச்ரவணம். ஸத்விஷயங்களை ஆசார்யனிடம் ச்ரவணம் செய்வதுண்டு. இவர் ஶிஷ்யருக்குப் பழகிக்கி வைத்துத் தாம் சொல்லி வைத்த பாடத்தையே ச்ரவணம் செய்கிறார். காநத்திலும் இவரே சிறந்த குரு. இவர் பாடிக்காட்டும் பாட்டுகளைக் கேட்டு அவர்கள் இன்புறுகிறார்கள். அவர்கள் அக் கீர்த்தநங்களையே கீர்த்தநம் செய்கிறார்கள். எல்லாம் பாடலும் ஆடலும் அபிநயமும்தான். ‘ப்ரகீதவசம்’ என்பது இதைக் காட்டுகிறது. ‘ஸ்வக்லுப்த’ என்பதால், இவரே இந்தக் கீர்த்தநங்களை ரசனை செய்தா ரென்பது தெரிகிறது. பாட்டு இட்டுக் கட்டினது மட்டுமல்ல; அந்தப் பாட்டுக்களில் வர்ணித்துள்ள ராம ராவண யுத்தங்களில் இவரும் கூட இருந்து போர் புரிந்தவ ராகையால், அப்பாட்டுக்களின் விஷயங்களான சரித்ரங்களின் கர்த்ருத்வத்திலும் இவருக்கு அந்வயமுண்டு என்று ‘ஸ்வக்லுப்தாநவத்யஸ்வயுத்தப்ரகீதை:’ என்று தனியாக அந்வயிப்பதால் பொருள் கிடைக்கிறது. இவர் அக்கதைகளைக் கேட்டுப் பாடியவரல்ல; கூட இருந்து அந்த யுத்தங்களிலேயே போர் புரிந்தவரு மாகிறா ரென்று ரஸம். நேரில் தாமும் கூட இருந்து செய்ததைப் பாடுகிறார். ‘ஶ்ரவணஸுகஸ்வரைர்கீதை:’ ப்ரஸித்தமான

ஸித்தர்களெல்லாம் இவரிடம் ஸாதகர்களாக ஶிக்ஷை சொல்லிக்கொள்ளுகிறார்க ளென்று ரஸம். பெரிய பெரிய கானஸித்தர்கள் இவர்களிடம் ஸாதகம் செய்ய ஶிக்ஷைக்குக் கூட்டம் கூட்டமாக வருகிறார்கள். இப்படி அநேகம் பேர்கள் இருப்பதாலும், தனித்தனியே எல்லார்க்கும் ஶிக்ஷை சொல்லிவைக்க அவகா ஶம் இராததாலும், கூட்டங் கூட்டமாக வந்து இவரைச் சூழ்ந்துகொண்டு ஏக காலத்தில் ஶிக்ஷை சொல்லிக்கொள்ளுகிறார்கள். இவர் ஸஞ்சரிக்கு மிடமெல் லாம் கூடவே அவர்களும் செல்லுகிறார்கள்.

'ஹ்ரீரகுஶொரவீரவ்ரணः'—பெரிய பெரிய யுத்த வ்ரணத் தழும்புகள் இவர் திருமேனியில் நிறைந்திருக்கின்றன. இவர் திருமேனி முழுவதும் ஆப ரணம்போல் நிரம்பியுள்ள அழியாத அக்காயங்களும், இந்த யுத்த வ்ருத்தாந்தங் களை வெகு அழகாக விளக்கிக் காட்டுகின்றன. இவர் தம் நாவினால் கீர்த்த நங்களைப் பாடிக் கதாகீர்த்தநம் செய்வதன்றி, இவர் திருமேனி முழுவதும் காயத் தழும்புகள் காணப்படுவதால், யுத்த வ்ருத்தாந்தக் கதைகளை, அவை கண் காட்சியாக ப்ரதலிக்கின்றன. இவர் திருமேனி முழுவதும் சிறந்த யுத்தக் காட்சி போன்றது. 'கதஜிகாவநம்', 'ஹிரண்மயீ நாமயஷ்டிம் கதஜீ நாம உஹாரதிம்' என்று மஹா பாரத ச்லோகத்தையும், 'ஸாவணதவ ஸவதம்' என்று அங்கே உள்ளதையும் ஸ்வாமி இங்கே நினைப்பூட்டுகிறார். கःகவிःஐதாஉவ ஸவதி' இங்கே இப்படி வருகிறவர் யாரோ?

தர்க்கன்:— இவர் யாரென்றால் :—

" வரிண தவமைமுக்தாஸஜ்ஞஸாஜிவரகூடி தஹாஸா:
வவ நமா-ஸுஸ்யதா நவவீணஜவொஷண: ।
உஸா-வவ-ரீதாஹொதிக்ஸவாமியிவெஹவ:
ரவ-வ திரணாரஹகீ ஸாரயொ2யத-வஷீத: ॥ "

இவர் பிறக்கும்போதே இளமையில் உதிக்கும் ஸூர்யனை உண்மையான சிவந்த பழுத்த பழமென்று நினைத்து, அதைப் பிடித்து உண்ணலாமென்று எண்ணி ஸூர்ய பிம்பத்தைப் பிடிக்க ஆகாயத்தில் உயரப் பாய்ந்து நெருங்கினார். ஆகா யம் உட்பட விச்வமே இவருக்கு ஒரு வ்ருக்ஷம்போல் தோன்றிற்று. உச்சியில் ஸூர்யன் ஒரு சிவந்த பழம்போல் காணப்பட்டது. சந்த்ரனை 'வா வா' வென்று சிசுக்கள் அழைக்கும்; 'பிடித்துக்கொடு' என்று கேட்கும். இக்குழந் தையோ 'வா வா' என்று ஸூர்யனை அழைக்கவில்லை; பிறரைப் பிடித்துக் கொடுக்கச்சொல்லிக் கேட்கவுமில்லை. தானாகவே உயரப் பாய்ந்தது. பின்னால் ஸாகரத்தை லங்கநம் செய்யப்போகிறவர், இப்போது ககநார்ணவத்தை லங்க நம் செய்கிறார். ஸமுத்ரம் தாண்டுவதும் ஆகாய ஸமுத்ரத்தைத் தாண்டுவதால் தான். 'வஸ-வெமம நாணவழ.' 'முக்தாஸஜ்ஞஸா' என்பது, உண்மையாகவே இவர் ஸூர்ய பிம்பத்தைச் சிவந்த பழமென்று நம்பி அதைப் பறித்து உண்ண நினைத்தாரென்பதைக் காட்டுகிறது. இவர் தகப்பனாரான வாயுவோடும், பெரிய திருவடியான கருடனோடும், இவர் வேகத்தில் போட்டிபோடக் கூடியவர்.

இவருடைய உயரப்பாயும் ஸாமர்த்யமும் வேகமும் அபரிமிதம். இவைக ளெல்லாம் இவர் மஹிமை; தசகண்டனுடைய பட்டணத்தைக் கொளுத்தியதால் இவர் வாலின் மஹிமை விளங்குகிறது. கொளுத்துகையில் பத்துக் கண்டங் களாலும் உலகத்தை அழச் செய்யும் ராவணன் அழுகிருனென்று ரஸம்.

ராம ராவணர்களுடைய ஆரம்ப யுத்தங்களில் இவரே ராமனுக்கு ரதமா யிருந்தார். இந்த ரதம் அச்சில்லாமலும் சக்ர மில்லாமலும் ஓடுவது; சேதந மான ரதம்; மஹா வீரரான ரதம்; 'ஶூரஸம்ஶ்ரயம்' என்றதால், பின்னல் முடிவில் வரப்போகும் மாதலி ஸாரதியான இந்த்ர ரதத்தினின்றும் வேற்றுமை. இந்த ரதத்திற்கு ஸாரதி வேறில்லை; மேலே ஆரூடரான ராமனே ஸாரதி. இந்த ரதத்திற்கு வேறு குதிரைகள் இல்லை; ரதமே குதிரை. இந்த ரதமும் தானே சண்டைசெய்ய வலிமையுடையது. பக்ஷி ரதர் என்பர்; இங்கே கபி ரதர். ரதியின் மநோரதப்படி யெல்லாம் ஸஞ்சரிக்கும் ரதம். விஹங்கரதர் இப் பொழுது ப்லவங்கம ரதரானர்.

இந்த நாடகத்தின் முதலாவது அங்கத்திலே, 'ஹநூமத்ஸ்வேதஸாரணா' என்று ஹநுமாரின் அநுஸந்தாநம். இங்கே தபஸ்ஸுக்கு ஸ்தாநம் தேடும் இந்த அங்கத்தில், நாடக மத்யத்திலும் ஹநுமதநுஸந்தாநம். இந்த்ரியத்தை அடக்கித் தவம்புரிய அவர் ஸ்மரணம் வேண்டாவோ? நாடகத்தின் ஆரம்பத்திலும் 'வநதநயவாயுவஹ்நிநீத்யா' என்று இவருடைய வாலுக்குத் தன் பேரில் உள்ள நெருப்புத் துளிகூட படாமல் ஶத்ரு பட்டணத்தையும் க்ரு ஹங்களையும் கொளுத்தும் ப்ரபாவம் காட்டப்பட்டது. இந்த வநத்தில் காமிக ளான ஸித்த கந்தர்வாதிகள் மிதுநங்களாக வஸித்துப் போகங்களில் மூழ்குவர்; காமகீதங்களைப் பாடிக்கொண்டிருப்பர். ராமகீதங்கள் பாடுவது ஹநுமத் ஸந்நிதியில். இவர்களுடைய ஸஹவாஸமே காமத்தைப் பெருக்கும். இங்கே தபஸ் செய்ய யோக்யமில்லை யென்று மேலே இந்த இடத்தைத் தள்ளப்போகிருர். ஹநுமார் ஒருவர்தான் இங்கே தம் த்யாந தபஸ்ஸுக்கு விக்நலேச மில்லாமல் வஸிக்கக்கூடியவ ரென்பது இங்கே விளக்கப்படுகிறது. இவரிடம் ஆடலும் பாடலும் கற்றுக் கொள்பவர் அப்ஸரஸ்ஸுக்களும் கந்தர்வ மிதுநங்களுமே. இருந்தா லென்ன? இவர் மனத்திற்கு விகார மென்பதே அஸம்பாவிதம். லங்கா நகரத்தில் அந்த:புர ஸ்த்ரீகள் தங்கள் பதிகளை அணைந்து இன்புறுகையிலும் பார்க்க நேரிட்டது இவருக்கு.

" காமம் த்ருஷ்டா மயா ஸர்வா: விஶ்வஸ்தா ராவணஸ்த்ரிய: |
ந ஹி மே மநஸ: கிஞ்சித் வைக்ருத்யமுபபத்யதே || "
" மநோ ஹி ஹேது: ஸர்வேஷாம் இந்த்ரியாணாம் ப்ரவர்த்தநே |
ஶுபாஶுபாஸ்வவஸ்தாஸு தச்ச மே ஸுவ்யவஸ்திதம் || "

" ஸீதையை உடனே இன்றிரவே தேடிக் காணவேண்டிய நிர்ப்பந்தம் எனக் குளது. பெண்களுக்குள்ளே பெண்பிள்ளையைத் தேடவேணும். ஸீதையைத் தேடும் ராமகைங்கர்ய வ்யாபாரத்தில், பதிகளோடு யதேஷ்டமாய் ரஹஸ்யத்தில்

விஹரிக்கும் அவஸ்தையிலுள்ள பெண்களை நான் பார்க்கவும் நேர்ந்தது. உற்றுப் பார்க்காமல் எப்படி அடையாளம் தெரியக்கூடும்? இப்படி இந்த அவஸ்தைகளில் பெண்களைக் கண்களால் உற்றுப் பார்க்க நேர்ந்தால், அதனுல் எனக்குத் தர்ம லோபசங்கை யில்லை. ஏனெனில், என் மனம் ஈஷத்தேனும் விகாரத்தை அடையவில்லை. மனத்தில் விகாரம் இருந்தா லல்லவோ கண்களால் பார்ப்பதில் தோஷம் வர இடமுண்டு? மனம் ஈஷத்தேனும் விகார மடையாமல் அசஞ்சலமாய் வைராக்யத்திலேயே ப்ரதிஷ்டிதமாயிருந்திருக்கிறது" என்று தைர்யமாய் ஸத்யமாகப் பேசக்கூடிய அதிகாரி. ராமன் ராம கதை கேட்டது, காந்தர்வ ரூபிகளும் கந்தர்வர்களைப்போல் பாடுபவருமான குசலவர்களிடம். ஹநுமார் ராமகதா கீதங்கள் பாடக் கேட்பது, அநேக ஸித்த கந்தர்வக் கூட்டங்களிடமும் அப்ஸரஸ் கணங்களிடமும். வால்மீகி கவநம் செய்த ராமாயண ச்லோகங்களைக் குசலவர்கள் பாட ராமன் கேட்டார். வால்மீகியாலேயே புகழப்படும் மஹா வாக்மியும் கவியுமான தாமே கவநம் செய்த கீதங்களை ஹநுமார் காந நர்த்தநாதிகளிலும் ரூபத்திலும் சிறந்த கந்தவர்ஸ் ஸரோங்கணங்களிடம் கேட்டார். ராமன் ராமாயணம் கேட்டது இருபது இருபது ஸர்க்கமாகச் சில திநங்களில். சிரஞ்ஜீவியான ஹநுமார் ஸர்வகாலமும் ராம சரித்ர கீதங்களைப் பாடக் கேட்டுக் கொண்டே இன்புறுகிருர்.

"யத்ர யத்ர ரகுநாத கீர்த்தநம் தத்ர தத்ர க்ருதமஸ்தகாஞ்ஜலிம் ।
பாஷ்பவாரிபரிபூர்ணலோசநம் மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம் ॥"

என்னும் ச்லோகப்படி, ராமாயணம் வாசிக்கும் இடங்களிலெல்லாம் அவர் ஸந்நிஹிதராய் சிரஸ்ஸிலே அஞ்ஜலி பண்ணிக்கொண்டு கண்ணும் கண்ணீருமாய் ச்ரவணம் செய்கிருர். அவர் தமது யோக மஹிமையாலும், காமரூபித்வ சக்தியாலும் அநேக ரூபங்களைப் பரிக்ரஹம் செய்துகொண்டு ஆங்கங்கே யோக மஹிமா விக்ரஹத்தோடு கேட்கிருர். அந்த விக்ரஹமும் கண்ணுக்குத் தெரியாத அத்ருச்ய ரூபம். கந்தமாதந வநத்தில் ஸஞ்சரிப்பது தம்முடைய அஸல் விக்ரஹத்தோடு. அது ஸர்வரும் ஸேவிக்கக் காட்டிய த்ருச்ய விக்ரஹம்.

[தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீசடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீ குலசேகரப் பெருமாள் ராமாயணம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.]

[ஸ்ரீ. உப. ஓரகடம் கோ. ஸுதர்சநாசார்யர், தமிழ்ப் பண்டிதர், சைதாப்பேட்டை.]

9. செறிதவச்சம் புகன்தன்னைச் சென்று கொன்று
செழுமறையோ னுயிர்மீட்டுத் தவத்தோ னீந்த
நிறைமணிப்பூ ணணியுங்கொண் டிலவணன் தன்னைத்
தம்பியால் வானேற்றி முனிவன் வேண்ட
திறல்விளங்கு மிலக்குமனைப் பிரிந்தான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடங் தன்னுள்
உறைவானை மறவாத வுள்ளங் தன்னை
உடையோமற் றுறுதுயர மடையோ மன்றே.

[இப்பாட்டால் சம்பூக வ்ருத்தாந்தம், ஆபரண தாரணம், லவணாஸுர விஜயம், லக்ஷ்மண வியோகம்—இவை சொல்லப்படுகின்றன.]

[பதவுரை] செறி தவம்—மிக்க தவத்தை யுடையவனான, சம்புகன் தன்னை—சம்பூகன் என்னும் சூத்ரனை, சென்று—(அவன் இருக்குமிடம் தேடிச்) சென்று, கொன்று—கொலை செய்து, செழு மறையோன்—சிறப்புமிக்க ப்ராம்ஹணனது புத்ரனை, உயிர் மீட்டு—உயிரை மீட்டுக் கொடுத்து, தவத்தோன் ஈந்த—மிக்க தவத்தை யுடையவனான அகஸ்த்ய பகவான் கொடுத்தருளின, நிறை மணி பூண் அணியும் கொண்டு—ப்ரகாசம் பொருந்திய ரத்நஹாரத்தைச் சாத்தியருளி, (திருவயோத்தியிலே புகுந்து), இலவணன் தன்னை—லவணாஸுரனை, தம்பியால்—தம்பியான சத்ருக்நனைக் கொண்டு, வான் ஏற்றி—வீர ஸ்வர்க்கத்தில் ஏற்றுவித்து, முனிவன் வேண்ட—துர்வாஸ முனிவர் சாபத்தால், திறல் விளங்கும்—பராக்ரமம் மிக்க, இலக்குமனை—(தனக்கு ப்ராண பூதனான) இளைய பெருமாளை, பிரிந்தான் தன்னை—விட்டுப் பிரிந்தவனும், தில்லைநகர் திருச்சித்ர கூடம் தன்னுள்—தில்லைத்திருச் சித்ரகூடத்தில், உறைவானை—நித்ய வாஸம் பண்ணும் ராமபிரானை, மறவாத—மறவாமல் எப்போதும் த்யானிக்கிற, உள்ளம் தன்னை—மனத்தை, உடையோம்—உடையோ மாயினோம் (ஆகையால்) மற்று—இனி, உறு துயரம்—(எம்பெருமானை அநுபவிக்கப் பெற்றிலோம் என்று) வரும் துன்பத்தை, அடையோம்—அடைய மாட்டோம்.

[கருத்து] சம்பூகன் என்னும் சூத்ரனைக் கொன்று ப்ராம்ஹண குமாரனைப் பிழைப்பித்தவனும், அகஸ்த்ய பகவான் அருளின ஆபரணத்தை அணிந்தவனும், தம்பியாகிய சத்ருக்நாழ்வானைக் கொண்டு லவணாஸுரனை வதைத்தவனும்,

துர்வாஸ சாபத்தாலே லக்ஷ்மணனை விட்டுப் பிரிந்தவனுமாகிய ஸ்ரீ ராமபிரானை எப்போதும் மறவாத மனத்தைப் பெற்றோம். இனி நமக்கொரு துயருமில்லை என்பதாம்.

[விசேட உரை] ராமபிரான் நீதியுடன் அரசாட்சி செய்து வருங்கால், ஒரு நாள் ஒரு ப்ராம்ஹணன் இறந்த தன் புதல்வனைத் தூக்கிக்கொண்டு ராமனுடைய அரண்மனை வாயிலில் வந்து விழுந்து, "ஐயோ! இவ்வெனது ஓரே புத்ரனுக்கு இத்தகைய அகால ம்ருத்யு நேர்ந்ததே! தாய் தந்தையர் இருக்க மகன் மரிப்பது அரசாட்சியின் குற்றமேயன்றி வேறன்று; ஐந்து வயதுள்ள இக் குழந்தை உன் அரசாட்சிக் குறைவினால் இறந்ததனால் இத்துயரம் ஆற்றாது நானும் என் மனைவியும் உன் மாளிகை வாயிலிலே உயிரை விடுகிறோம். இந்த ப்ரம்மஹத்தி தோஷத்தையும் ஏற்றுக்கொண்டு நீ ஸுகமாய் வாழலாம்" என நிஷ்டூரமாய்ச் சொல்லிக் கதறி அரற்ற, ராமபிரான் வ்யாகுல மடைந்து வஸிஷ்டர் ஸுமந்த்ரர் முதலானாரோடு இச்செய்தியை அறிவித்து விசாரிக்க, அவர்களுள் நாரத பகவான், "யாரோ அதிகார மில்லாதவன் தவம் செய்கிறான்; அது அதர்மம்; அதன் பயனால் இது நேர்ந்தது; அதனைக் களைந்தால் இக்குழந்தை பிழைத்தெழும்" என்று கூற, உடனே அக்குழவி ப்ரேதத்தை எண்ணெய்க் குடத்தி விட்டுக் கெடாமற் காக்கும்படி லக்ஷ்மணனுக்கு நியமித்துப் புஷ்பக விமானத்தை வருவித்து அதன்மேல் ஏறிக்கொண்டு ஆகாய மார்க்கமாய்த் தேடுகையில், தென்திசையில் சைவலம் என்னும் கிரிக்கு அணித்தான ஒரு பொய்கைக் கரையில் ஓரிடத்தில் தலை கீழாகத் தவம் செய்துகொண்டிருக்கும் ஒருவனைக் கண்டு ஸந்தேஹித்து, அவனருகில் சென்று, "நீ யார்? எந்த வர்ணத்தைச் சேர்ந்தவன்? எதற்காகத் தவம் இயற்றுகின்றனை? உள்ளபடி சொல்" என்று கேட்க, "ஐயா! நான் சூத்ர ஜாதியிற் பிறந்தவன்; என்னைச் சம்பூகன் என்பார்கள்; இவ்வுடலோடு ஸ்வர்க்கம் போகவேண்டுமென்று இவ்வாறு தவம் செய்கிறேன்" என்று விடைகொடுக்க, ராமபிரான் அதனைக் கேட்டு, "சம்புக! நீ சூத்ரனாதலின் உனக்குத் தவம் செய்ய அதிகாரமில்லை; இது அறமன்று; நான் அரசனாதலின் உன்னை வதைப்பதே தர்மம்" என்று அருளிச்செய்ய, "அதுவும் எனது பாக்யமே" என்று அவன் உடன்பட, ஸ்வாமி உடனே வாளை எடுத்து அவன் தலையை வீச, அவன் இறந்து நற்கதி பெற்றான். உடனே அக்குழவியும் உயிர் பெற்றெழுந்தது என்பதும்;

பின்பு ஸ்ரீ ராகவன் அகஸ்த்யாச்சிரமம் எழுந்தருளி அவரை வணங்க, அம்முனிவர் அப்பிரானுக்கு விருந்தளித்து உபசரித்து, விசுவகர்மாவினால் நிர்மிக்கப்பட்டதும், காந்தியில் ஸூர்யனைப் போன்றதும், வேண்டுவனவற்றை அளிக்க வல்லதும், ஸ்வேதனென்னும் அரசனால் தரப்பட்டதுமான ஒரு திருவாபரணத்தை அருள, அப்பிரான் அதனை அன்புடன் சாத்திக்கொண்டனன் என்பதும்;

இராமபிரான் நெடுங்காலம் அரசியல் நடத்திய பின்னர், ஒரு நாள் காலருத்ரமூர்த்தி நான்முகனால் ஏவப்பட்டுத் தாபஸ வேஷம் தரித்து ராமபிரானிடம்

வந்து ஆசீர்வாதம் செய்ய, ராமன் முறைப்படி அவரை உபசரித்து, "வந்த காரியம் என்?" என்று விசாரிக்க, தபஸ்வியும், "என்னைத் தூதாக அனுப்பிய மாமுனிவரின் வாக்யங்களைத் தேவரீர் கேட்டருளல் வேண்டும்; அதற்கு நாம் இருவரேயன்றி வேறொருவரும் இருத்தல் கூடாது; நம்முடைய ஸல்லாபத்தைப் பிறர் கேட்டாலும் இவ்விடத்துக்கு வந்தாலும் அவர் கொலைக்கு உரியராகும்படி கட்டளையிடல் வேண்டும்" என்ன, ராமபிரான் அதை அங்கீகரித்து லக்ஷ்மணனை நோக்கி, "இங்கு வேறு காவலாளன் வேண்டாம்; நீயே இருக்கக் கடவை; நாங்கள் பேசும்போது யாவரும் வரக்கூடாது; ஒட்டிக் கேட்கவும் கூடாது; அவ்வாறு செய்பவர் வதம் செய்யப்படுவர்; ஆதலின் நீ ஜாக்ரதையாகக் காவல் செய்" என்று கட்டளையிட்டு ஏகாந்தத்திற் சென்று சேர, அம்முனிவர், ராமபிரான் தன்னடிச் சோதிக்கு எழுந்தருள்வதைக் குறித்து ஸம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது, துர்வாஸ முனிவர் வந்து "யான் விரைவில் ராமனைப் பார்க்க வேண்டும்" என்று கூற, லக்ஷ்மணன் "ஸ்வாமி! தேவரீர் வந்த காரியம் யாது? அடியேனிடம் தெரிவித்தால் அடியேன் முடித்து வைக்கிறேன். இப்போது உட்செல்வதற்கில்லை" என்று கூற, முனிவர் முனிவு கொண்டு "இந்த க்ஷணத்தில் நான் வந்ததைத் தெரிவிக்கவேண்டும்; அப்படிச் செய்யாயாயின் நீங்களும் உங்கள் ஸந்ததியும் இந்நகரும் அழியும்படி சபிப்பேன்" என்று கோபம் பொங்கிக் கூற, இளைய பெருமாள் பயந்து "என் ஒருவனுக்குக் கேடு வந்தாலும் வரட்டும்; பிறர்க்கு வராதிருந்தாற் போதும்" என்று நிச்சயித்து ஸ்ரீராம ஸந்நிதானம் சென்று துர்வாஸ முனிவர் வரவைத் தெரிவிக்க, ஸ்ரீராமன் தபஸ்வியை அனுப்பி விட்டுத் துர்வாஸரை வணங்கி விசாரிக்க, அவர் "நான் ஆயிர வர்ஷ மளவும் தவம் செய்து வந்தேன்; இப்போது பெரும் பசியால் வருந்துகின்றேன். அந்நம் தரவேண்டும்" என்று வேண்ட, உடனே ராகவ பிரான் அவர் விரும்பியபடி அவர் பசியைத் தீர்க்க, அம்முனிவர் ஸ்வாமியை வாழ்த்திச் சென்றார். பின்பு ராகவன் லக்ஷ்மணனை அணுகி, "என் கட்டளையை மீறினை; உன்னை வதைப்பதே ந்யாயம்; தக்கவர் விஷயத்தில் கைவிடுவதும் கொலையை ஒக்கும்; ஆதலின் நான் உன்னைக் கைவிட்டேன்; நீ என் முன் நில்லாமற் செல்" என்ன, இளையவரும் இராமனது பிரிவாற்றாமையாற் கண்ணீர் விட்டுக்கொண்டே ஸரயு நதிக்குச் சென்று நீராடி ப்ராணாயாமத்தால் மூச்சை யடக்கிப் பரமபதம் புக்கனர் என்பதும் இப்பாசுரத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்கள்.

[தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வேதாந்த விஷயமான ஒரு ஸந்தேஹத்துக்கு ஸமாதாநம்

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபில மடத்து ஆஸ்தாந வித்வான்.]

சென்ற மாஸத்து ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியை 148-ம் பக்கத்தில், "மோக்ஷத்தை அடைந்தவன் மறுபடியும் ஸம்ஸாரத்திற்கு வருகிறதில்லை யென்பது அர்ச்சிராதி கதியாகச் சென்றவர்கட்கு மாத்ரமா அல்லது வேறுவழியால் சென்றவர்கட்கும் கூடவா?" என்று ஸந்தேஹம் எழுதிவிட்டு, டி ஸந்தேஹத்திற்குக் காரணத்தைச் சொல்லுமிடத்தில் "இவை யெல்லாவற்றையும் பரிசீலித்துப் பார்த்தால், ஒருக்கால் ஸ்ரீ தேசிகன் அர்ச்சிராதி மார்க்கமாக வைகுண்டம் சென்றவர்க்கே அபுநராவ்ருத்தி யுண்டு; வைதிகன் புத்ரர்கள் போல மார்க்காந்தரங்களினால் வைகுண்டம் சென்றவர்களுக்குப் புநராவ்ருத்தி ஸம்பவிக்கலாம் என்று திருவுள்ளம்பற்றி யிருக்கலாமோ என்று ஸந்தேஹம் ஜனிக்கிறது" என்று எழுதப்பட்டிருக்கிறது. அர்ச்சிராதி மார்க்கமாகச் சென்றவர்க்கே அபுநாவ்ருத்தி யுண்டென்றும், அர்ச்சிராதி மார்க்கம் இன்றிக்கே மார்க்காந்தரங்களில் வைகுண்டம் சென்றவர்களுக்குப் புநராவ்ருத்தி ஸம்பவிக்கலா மென்றும், ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம் பற்ற ந்யாயமில்லை என்பதை இங்கே நிரூபிக்கிறோம்.

மோக்ஷமென்ற ஸ்ரீ வைகுண்ட ஸ்தாநத்தை ஆத்மாக்கள் பல வழிகளினாலும் அடையலாம். "புண்ய கர்ம பலன்களை அநுபவிப்பதற்காக ஸ்வர்க்கத்தை அடைந்தவர்கள் திரும்பவும் ஸம்ஸாரத்தில் வந்து பிறக்கிறார்கள்" என்பதை ச்ருதி ஸ்ம்ருதிகள் வ்யக்தமாகச் சொல்வனபோல், மோக்ஷ மடைந்தவன் திரும்பி ஸம்ஸார மண்டலத்தில் வந்து ஜனிப்பதாக அவை சொல்லவில்லை. தவிர: மோக்ஷ மடைந்தவன் திரும்பி ஸம்ஸாரத்தில் ஜனிப்பதில்லை யென்றும் சொல்லுகின்றன. இந்த அநாவ்ருத்தியானது மோக்ஷ ஸ்தாந ஸ்வபாவ ஹேதுகமென்று தோன்றுவதால், அர்ச்சிராதி மார்க்க ஸம்பந்த ஹேதுகமென்று சொல்வதற்கு இடமில்லாமலும் இருக்கிறது. ஆகையால் அர்ச்சிராதி மார்க்கத்தைத் தவிர வேறு மார்க்கங்களினால் வைகுண்டம் சென்றவர்கள் ஸம்ஸாரத்தில் பிறக்கக்கூடு மென்பது தேசிகன் திருவுள்ள மென்று ஸந்தேஹம் ஜனிக்கக் காரணமில்லை.

இஃதிருக்க: "தேஷாம் ந புநராவ்ருத்தி:" என்று ச்ருதியிலும், "யஹாவஜெநம் ஜாநதி" என்று ஸ்ம்ருதியிலும் சொல்லப்படுகிற அர்ச்சிராதி மார்க்கமானது சில விடங்களில் மாத்ரம் சொல்லப்பட்டிருந்தாலும், ஸர்வ வித்யா நிஷ்டர்களுக்கு முண்டென்று அநியமாதிகரணத்தில் சொல்லப்பட் டிருப்பதால், "ஏதேந ப்ரதிபத்யமாநா இமம் மாநவமாவர்த்தம் நாவர்த்தந்தே" என்று அர்ச்சிராதி மார்க்கத்தினால் மோக்ஷம் பெற்றவன் திரும்பவும் ஸம்ஸாரத்தில் பிறப்பதில்லை யென்று சொல்லுகிறபடியாலும், ப்ரம்ஹ வித்துக்களுக்கு மறுபடி ஸம்ஸார ப்ராப்தி ஸம்பவிக்காது. "ஸகஸம்வஹதி ஶாந்தா" [பாரதம் ஶாந்தி பர்வம்] என்று தொடங்கிச் சொல்லப்படுகிற க்ரம முக்தியிலும், "ஸுஹ தக்ஷாய கதுஜெநமிவ தஷுஷி அாஹிஷொ" என்று அநாவ்ருத்தி சொல்லப்படுகிறபடியால் அவர்களுக்கும் ஸம்ஸார ப்ராப்தி சொல்ல முடியாது.

ஆக, இப்படி ஸ்ரீ வைகுண்டம் போனவன் மறுபடியும் திரும்பி ஸம்ஸார பந்தம் பெறுவதற்கு ஒருபடியாலும் ப்ரமாண மில்லாதிருக்கையில், ஸ்ரீ க்ருஷ்ணன் வைதிகன் குழந்தைகளை ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து ஸம்ஸாரத்தி லிருக்கும்படி அழைத்து வந்ததாக [ஸ்ரீ பாகவதம் தஶமஸ்கந்தம் 89-ல்] ஸ்ரீ சுகர் அருளிச்செய்திருப்பதால், அது எப்படி ஸங்கதமாகு மென்கிற ஶங்கை ஒருவருக்கும் உண்டாகாதபடி, பரமபதஸோபாநத்தில் "வைதிக புத்ரர்கள் இவ்வர்ச்சிராதி கதியாலே தேஶ விஶேஷ ப்ராப்தி பெற்றவர்கள்

அல்லாமையாலே அவர்களை மீட்டது விருத்தமன்று'' என்று ஒரு ஸமாதாநம் அருளிச் செய்தார். இது மற்றும் அநாவ்ருத்தியை யுடைய மார்க்காந்தரங்களுக்கும் உபலக்ஷணம். இங்கு வைதிக புத்ரர்கள் மோக்ஷோபாயாநுஷ்டாநம் பண்ண யோக்யரல்லாத சிசுக்களாகையினால், அக் குழந்தைகளுக்குப் பக்த்யாதி உபாயாநுஷ்டாந மில்லை. உபாயாநுஷ்டாநம் இல்லாததால் அவர்களுக்கே சொல்லப்பட்ட அர்ச்சிராதிகதி யில்லை. அவ்வழியால் வைகுண்ட லோகம் போகாததனால் அவ்வழியினால் சென்றவர்களுக்குச் சொல்லப்பட்ட அநாவ்ருத்தி யில்லை.

புண்ய பாப ரூப கர்ம ஸம்பந்தங்கள் வைதிகன் புத்ரர்களுக்கு இருந்தபடியால் ஸம்ஸார ஸம்பந்தம் அவர்களைப் பிறகு அநுவர்த்தித்தது. ஆனால் "அக்குந்தைகள் ப்ராக்ருத ஶரீரத்துடன், அப்ராக்ருத தேஶமான ஸ்ரீ வைகுண்டத்தில் எப்படி யிருக்கலாம்?'' என்னும் ஸந்தேஹத்தை ஸ்வாமி தேஶிகன் ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்ஜநத்தில்,

"[illegible]''

என்று பரிஹரித்திருக்கிறார். ஆகையால் அர்ச்சிராதி மார்க்கம் தவிர, மற்றும் எல்லா மார்க்கங்களினால் வைகுண்டம் போனவர்கள் ஸம்ஸாரத்திற்கு வரலாமென்பது ஸ்ரீ தேஶிகன் திருவுள்ளமாக இருக்குமோ வென்று ஸந்தேஹிக்க இடமில்லை. ஆகையால் தான் எந்த மார்க்கத்திற்கு அபுநராவ்ருத்தி ஶாஸ்த்ரத்தில் சொல்லப்பட வில்லையோ, அந்த மார்க்கம்தான் வைதிக புத்ரர்கள் வைகுந்தத்திற்குப் போன மார்க்க மென்பது ரத்நபேடிகையில் எழுதப்பட்டிருக்கிறது.

[குறிப்பு:—"மோக்ஷமடைந்தவன் மறுபடியும் ஸம்ஸாரத்தில் பிறப்பதில்லை என்பதற்கு ச்ருதி, ஸ்ம்ருதி, ஆழ்வார்களின் அருளிச்செயல்கள், இவைகளி லிருந்து 19 வாக்யங்களை ப்ரமாணமாக அநுக்ரஹித்திருக்கிறார். காகிதப் பஞ்சத்தால் அந்த வாக்யங்களை வெளியிடக்கூடவில்லை. நிற்க: அந்த விஷயம் நிராக்ஷேபமானது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீநரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

செய்தி

ஸ்ரீ மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத காலேஜ்.

இந்த வித்யா ஸ்தாநம் கோடை கால விராமம் முடிந்து, மறுபடியும் இவ்வர்ஷத்து ப்ரவசநத்திற்காக 30-6-46 திங்களன்று திறக்கப்பட்டது. பாடசாலையின் அத்யக்ஷர், ப்ரவசந கர்த்தாக்கள் எல்லாரும் வந்திருந்தார்கள். மானேஜர் ஸ்வாமியும் வந்திருந்தார். புதிதாகப் பாடஶாலையில் சேர்வதற்காக மனுச்செய்துகொண்டிருந்த வித்யார்த்திகள் பரீக்ஷிக்கப்பட்டு அவரவர்களுடைய ஜ்ஞாநத்திற்குத் தக்கபடி அந்தந்த வகுப்பில் சேர்க்கப்பட்டார்கள். இப்பொழுது சாஸ்த்ர பாடசாலையில் 78 பெயர்களும், வேதம் ப்ரபந்தம் இந்தப் பாகத்தில் 20 பெயர்களும் இருக்கிறார்கள். என்ட்ரன்ஸ் பரீக்ஷையின் நிஷ்பத்தி வெளிவந்தால், அதில் தேறினவர்களும் ஶிரோமணி வகுப்புக்குச் சேர்வர்களாதலால், ஶிரோமணி வகுப்பில் வித்யார்த்திகளின் ஸங்க்யை அதிகரிக்கலாம். அப்படி அதிகரித்தாலும், பாடஶாலை வித்யார்த்திகளின் ஸங்க்யை மொத்தம் 100-க்குமேல் இருக்கமாட்டாது. இதற்கு மேற்பட்டு வித்யார்த்திகளைச் சேர்க்கவேண்டா மென்பது ஸ்ரீ அழகியசிங்கருடைய நியமநம். இந்த ஸங்க்யைக்கே இடம் அபர்யாப்தமாக இருக்கிறபடியால், காலெஜின் முதல் மாடியில் சில அறைகள் கட்டுவதற்கு ஸம்விதாநங்கள் நடந்து வருகின்றன.

ஓர் ஆஸ்திகர்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑌸𑍍𑌮𑍈 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்.

ஸ்ரீ சாதுர்மாஸ்ய ஸங்கல்பம்.

நிகழும் ஆனிமீ, 30உ (14—7—'46) ஞாயிற்றுக்கிழமையன்று, ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதித்யாதி பிருதலங்க்ருத ஸ்ரீ வண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம் திருவெவ்வுளூரில் நடக்கின்றது. அக்காலத்தில் அவ்விடத்தில் பெரியதொரு ஸ்ரீ வைஷ்ணவ ஸங்கம் சேரும். அநேக வைதிக வித்வான்களும் லௌகிக ஆஸ்திக ப்ரபுக்களும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஸேவிப்பதற்கும், ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் எழுந்தருள்வார்கள். அப்படிப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்தியைக் கண்ணாரக் கண்டு, அதனால் ஜநிக்கும் ஆநந்தத்தில் மக்நர்களாய், அவர்களுடைய கடாக்ஷத்திற்கு க்ஷணமாத்ரம் பாத்ரமாக நிற்பது ஒரு பாக்ய விஶேஷமே.

"......................................மெய்யடியார்கள் தம்
ஈட்டங் கண்டிடக் கூடுமேலது காணும் கண்பய னாவதே."

"𑌸𑌂𑌸𑌾𑌰𑌜𑌲𑌧𑍇 𑌯𑌷𑍍𑌟𑌿 𑌚 𑌤𑌾𑌰𑌕𑌂 𑌨 𑌸𑍍𑌵𑌕𑍀𑌯𑌃
𑌸𑌂𑌸𑌾𑌰 𑌨𑌾𑌶 𑌮𑌹𑌤𑍍𑌸𑌵𑌵𑌵𑌸𑍍 𑌨𑌵"

ஸ்ரீ ஸ்வாமி ஆஸ்தாநத்துக்கு எழுந்தருளி, சற்றேறக்குறைய ஐந்து வர்ஷங்கள் ஆகின்றன. தாபத்ரயத்தால் அடிபட்டு ஸம்ஸார பதவியில் வருந்தி நிற்கும் ஜநங்களைப் பார்த்து ஜாத நிர்வேதராய், அந்தத் தாபங்களிலிருந்து அவர்களை விமோசநம் செய்வதே தமது முக்ய தர்ம மென்றும், லோக ஹிதைஷிணியாகிற ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தைத் திஶந்தங்களிலும் வ்யாபிக்கச் செய்வதே அந்தத் தர்மத்தின் நிர்வாஹத்திற்கு உசிததமமான உபாய மென்றும் உணர்ந்து, அதற்காகப் பலவித கார்யங்களை ஸ்ரீ அழகிய சிங்கர் நடத்திவருவதை நமது ஸுஹ்ருத்துக்கள் எல்லாரும் அறிவார்கள். ஒவ்வொரு வர்ஷத்திலும் பெரியதொரு வித்வத் ஸதஸ்ஸை அமைத்து, அதை மிக்க சிறப்புடன் பத்துத் திநங்கள் நடத்தியும், ஆஸ்திகர்களான ஶிஷ்ய ஜநங்களை வரவழைத்து ஸ்ரீ ஸந்நிதியிலேயே

அவர்களுக்கு ஸகல ஸௌகர்யங்களையும் ப்ரஸாதித்து, அவரவர்களுக்குத் தக்க வாறு க்ரந்த காலக்ஷேபங்களை அநுக்ரஹித்தும், ஸ்ரீ ராமாநுஜ ஸம்ப்ரதாய வ்யாப்திக்கு அவச்யம் அபேக்ஷிதமான தேவபாஷா ஜ்ஞாநத்தை வ்ருத்திசெய் யும்பொருட்டு ஸ்ரீ மதுராந்தகம் என்னும் ப்ரதேசத்தில் பெரியதொரு வித்யா ஸ்தாநத்தை நிர்மாணம் செய்தும், ஸாமாந்ய ஜநங்களுக்கும் நமது ஸித்தாந்தத் தில் ஒருவித அபிருசியை உண்டுபண்ணுவதற்காக "ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியை" என் னும் பெயருடன் ஒரு தமிழ்ப் பத்ரிகையை ப்ரதி மாஸமும் ப்ரசுரம் செய்தும், இம்மாதிரி இதரர்களால் துஸ்ஸாத்யமான பலவித ஸத்க்ருத்யங்களை எவ்வித குறைவு மின்றிக்கே ஸாதித்து வருவதைப் பார்த்தால், 'ஸ்ரிய:பதியின் அபராவதா ரமே ஸதாசார்யன்' என்னும் சாஸ்த்ரார்த்தம் நமது ஸ்ரீ அழகியசிங்கர் திறத்தில் அந்வர்த்தமாகிற தென்பதற்குத் தட்டில்லை. அந்த ஸ்ரிய:பதி இம்மஹானை இந்த விபூதியில் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருக்கும்படி அநுக்ர ஹித்து, ஜகத் முழுதும் குறைவற்ற க்ஷேமத்தை அடையுமாறு ஸங்கல்பிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

* * * *

ஸம்ஸ்க்ருத வித்யாபிவ்ருத்தி

உத்தர தேசத்தில் 'ஆள்வார்' என்னும் பெயருள்ள ஸம்ஸ்தாந மொன்று இருக்கிறது. அதன் அதிபதியாயிருக்கும் மஹான் ஸம்ஸ்க்ருத பாஷை யின் அபிவ்ருத்தியைக் கருதி 'ஸம்ஸ்க்ருத வித்யாஸ்தாநம்' [Sanskrit University] என்று ஒரு பெரிய நிலையத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும், அதற்கு மூலதநமாக ஐம்பது லக்ஷம் ரூபாய் கொடுத்திருப்பதாகவும், அந்தந்தக் காலங் களில் நடக்கவேண்டிய நிர்வாஹத்திற்காக ஒவ்வொரு வர்ஷத்திலும் ஐம்பதினாயி ரம் ரூபாய் கொடுப்பதாக ப்ரதிஜ்ஞை செய்திருப்பதாகவும், வ்ருத்தாந்த பத் ரிகைகளில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இதை நாம் அளவற்ற ஸந்தோ ஷத்துடன் வரவேற்கிறோம்.

ஸம்ஸ்க்ருதமானது இந்தத் தேசத்து ஜனங்களின் பாஷை அன்றென் றும், அது வேறு தேசங்களிலிருந்து துராக்ரமமாக இந்த தேசத்தில் ப்ரவே சித்த ப்ராஹ்மணர்களுடைய பாஷையென்றும், அந்தக் காரணத்தால் அதன் மீது கோபங்கொண்டு அதை ஸமூலம் நசிப்பிக்க வேண்டுமென்றும் உக்ரமான அபிநிவேசம் கொண்டிருக்கும் சில ஜநங்களின் நடுவில், இம்மாதிரி நிகழ்ச்சி யொன்று நடைபெறுகிற தென்றால், அது, கும்மட்டியில் தாமரை பூத்ததுபோல் அத்யாச்சர்யகர மன்றோ?

இத்தென்னிந்தியாவில் 'தாமே தமிழர்கள்' என்று சொல்லிக்கொள் ளும் சிலர், ஸம்ஸ்க்ருத பாஷையின் ப்ரசாரத்தைத் தடுப்பதற்குக் கணக்கற்ற உபாயங்களைக் கைப்பற்றி வருகிறார்களென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். பாலசிக்ஷையைச் செய்துவரும் பாடசாலைகளில் ஸம்ஸ்க்ருத பாஷா ப்ரவசநம் கூடாதாம். தாய்பாஷையைக் கற்றவர்களே ராஜாங்கத்து வேலைக்கு அர்ஹர் களாம். நாம் பேசும் பேச்சுக்களிலோ, எழுதும் வ்யாஸங்களிலோ, ஸம்ஸ்க்

ருத ஶப்தங்களைச் சேர்த்துப் பேசுவதும் எழுதுவதும் தவறும். இவ்வாறு உத்கோஷித்துக்கொண்டு ஸம்ஸ்க்ருத பாஷையின் ஸம்பந்தம் பெற்றுள்ள புஸ்தகங்களைத் தீக்கு இரையாக்குவதையும் நாம் பார்க்கிறோமல்லவா ?

ஸம்ஸ்க்ருதப் படிப்பை ஒழிப்பதற்கு இப்பொழுது புதிய ஸம்பவமொன்று எதிர்பாராமல் நேர்ந்திருக்கிறது. பத்துப் பதினைந்து தினங்களுக்கு முன் ராஜாங்கத்தார், பாடஶாலைகளில் நடைபெறவேண்டிய பாடங்களில் சில மாறுதல்களை வெளியிட்டிருக்கிறார்கள். இதுவரையில் ப்ராதாந்யத்தை வஹித்து வந்த ஆங்கில பாஷா பாடங்கள் இனி அப்ரதானமான ஸ்தானத்தை வஹிக்க வேண்டுமென்பதும், இதுபர்யந்தம் அப்ரதானமாயிருந்த தாய்ப் பாஷாப்யாஸம் ப்ராதாந்யத்தை வஹிக்கவேண்டுமென்பதும் அம்மாறுதல்களில் ஒன்று. ஆபாதத: பார்க்கும்பொழுது இது ஸாதுவான மாறுதலென்றே தோன்றும். தேஶாந்தர பாஷையை அப்ரதானமாக ஒதுக்குவது உசிதமேயாயினும், இது ஸம்ஸ்க்ருதத்தின் அபிவ்ருத்தியைப் பாதிக்கிறதாகையால், அந்த மாறுதலை அஸாதுவென்றே நாம் சொல்வோம். இந்த வ்யவஸ்தையின்படி ப்ரதானமாகச் செய்யப்பட்டுள்ள மாத்ரு பாஷையை எல்லாரும் அவச்யம் அப்யஸிக்கவேண்டும். ஆங்கில பாஷை அப்ரதானமாகச் செய்யப்பட்டிருந்தபோதிலும், அதன் ஜ்ஞாநம் ஜீவநத்திற்கு ஒருவாறு உபகாரமாக இருக்குமாகையால், அதையே இரண்டாவது பாஷையாக எல்லாரும் எடுத்துக் கொள்வார்கள்; ஆங்கிலத்தைப் பரித்யஜித்து ஸம்ஸ்க்ருதம் முதலியவைகளை இரண்டாவது பாஷையாக எடுத்துக்கொள்ள இந்த வ்யவஸ்தை இடங்கொடுத்தபோதிலும், அப்படி ஆங்கிலத்தை ஒருவரும் ஆத்யந்திகமாக விடமாட்டார்களாகையால், ஸம்ஸ்க்ருதம் முதலிய இதர பாஷாப்யாஸம் விலக்கப்பட்டே போய்விடும். இந்த அநிஷ்டமான பரிணமம் இந்த வ்யவஸ்தையை ஏற்படுத்தினவர்களால் பூர்வமே உத்தேசிக்கப்பட்டதென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆங்கில பாஷையை அப்ரதானமாகச் செய்யவேண்டுமென்பதே அவர்களின் கருத்தாக இருக்கலாம். எப்படியிருந்தாலும், இந்தப் பரிணமம் அவர்களுக்கு இஷ்டமென்று நினைக்க இடமிருக்கிறதாகையால், அவர்கள் வேண்டுமென்றே இந்த வ்யவஸ்தையைச் செய்தார்களோவென்று ஸந்தேஹிக்க இடமுண்டு. ஆனால் ஸம்ஸ்க்ருதம் என்னும் பூண்டை நசிப்பிக்க இவர்களால் முடியுமா ? பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் அஸ்தமித்து விட்டதாகுமோ ? ஆள்வார் தேஶத்து அதிபதி போன்ற மஹா மநஸ்விகள் இருக்கும் பர்யந்தம் நாம் ஶோகத்தை அடையக் காரணமில்லை.

* * * * * *

அபுநராவ்ருத்தியைப் பற்றிய ஸந்தேஹ நிர்ணயம்

சென்ற ஸஞ்சிகையில் அபுநராவ்ருத்தியைப்பற்றி நாம் ஒரு ஸந்தேஹத்தை வெளியிட்டிருந்தோம். அதற்கு ஸ்ரீ. உப. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸமாதாநம் அநுக்ரஹித்திருக்கிறார். அதனால் ஸந்தேஹம் பெரும்பாலும் தெளிந்துவிட்டது. ஸ்வல்பம் தெளியாத அம்ஶத்தை மறுபடியும் விண்ணப்பித்துக் கொள்கிறோம்.

மோக்ஷ மடைந்தவன் மறுபடியும் ஸம்ஸாரத்தில் பிறப்பதில்லை என்பதற்குப் வஹுஸ்ஸ்தமான ப்ரமாணங்கள் இருக்கின்றன வாகையால், அவைகளுக்கு விருத்தமாக ஸ்ரீ தேஸிகன் திருவுள்ளம்பற்றுவதற்கு ஸம்பாவனை இல்லை யென்று ஸ்ரீ ஸ்வாமி ஸாதித்திருப்பது உபபந்நமே. ஆனால், பரமபத ஸோபாநத்தில் வைதிகன் புத்ராதிகளை மீட்டது விருத்தமன்று என்பதற்கு, 'இவ்வர்ச்சிராதி கதியாலே தேஶ விஶேஷ ப்ராப்தி பெற்றவர்க ளல்லாமையாலே' என்று 'அர்ச்சிராதி கதியினால் தேஶ விஶேஷ ப்ராப்தி யில்லை' என்பதை விஶேஷித்து அநுக்ரஹித் திருப்பதற்கு ப்ரயோஜந மென்ன? என்னும் ப்ரச்நத்துக்கு ஸமாதாநம் ஏற்படவில்லையே. 'அது மற்றை மார்க்கங்களுக்கும் உபலக்ஷணம்' என்று சொல்லக் கூடுமோ? 'உபாயாநுஷ்டாநம் செய்து தேஶ விஶேஷ ப்ராப்தி யில்லாமையாலே' என்று ஹேது நிர்த்தேசத்தை ஸுலபமாகச் செய்திருக்கலாமே. அதைச் செய்யாமல் 'அர்ச்சிராதி கதியினால் இல்லையாதலால்' என்று விஶேஷித்து நிர்த்தேஶம் செய்திருப்பது ஒரு ப்ரயோஜநத்தை உத்தேஶித்திருக்கவேண்டு மன்றோ?

நிற்க: 'புண்ய பாப ரூப கர்ம ஸம்பந்தங்கள் அவர்களுக்கு இருந்தபடியால், ஸம்ஸார ஸம்பந்தம் பிறகு அநுவர்த்தித்து' என்று ஸ்ரீ ஸ்வாமி அநுக்ரஹித்திருக்கிறார். அப்படிப்பட்ட கர்மஸம்பந்தம் இருக்குமவர்களுக்கும் வைகுண்ட ப்ராப்தி ஸம்பவிக்குமோ? கர்மங்கள் நிஶ்ஶேஷ நிவ்ருத்தங்களான பிறகே தேஶ விஶேஷ ப்ராப்தி யென்று ஶாஸ்த்ரங்கள் சொல்லவில்லையா?

. ப்ராக்ருத ஶரீரத்துடன் அப்ராக்ருத தேசத்திற்குப் போவது உபபந்நமென்று ஸ்ரீ தேஶிகன் ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் அநுக்ரஹித்திருப்பதைப் பார்த்தால், வைதிகன் புத்ரர்கள் போன்றவர்களின் வ்ருத்தாந்தத்தை ஸமீகரணம் செய்வதற்காக 'ப்ராக்ருத அப்ராக்ருத பதார்த்தங்களின் சேர்க்கை உபபந்நம்' என்று வேறு கதியின்றிக்கே கல்பித்திருப்பது போலத் தெரிகின்றதே யொழிய, ப்ரமாணாந்தரங்களால் ஸித்தமான ஒரு நிர்ணயத்தைக் கொண்டு ப்ரஸ்துத விஷயத்தின் ஸாதுத்வத்தை ஸாதிப்பதாகத் தெரியவில்லை. "கயம்வடேத" [வேறு எவ்விதத்தில் இது கடிக்கும்?] என்னும் உக்திபங்கி இதை வெளியிடுகிறதன்றோ? பகவ தவதாரங்களில் அம்மாதிரியான ஸம்பந்தம் ஏற்படுவது பகவானுடைய விலக்ஷண ஶக்தி விஶேஷத்தா லன்றோ? அப்படிப்பட்ட விலக்ஷண ஶக்தி ஹீநர்கள் விஷயத்தில் அது ஸாத்யமாகுமோ?

ரத்ந பேடிகையில் "எந்த மார்க்கத்துக்கு அபுநராவ்ருத்தி ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட வில்லையோ, அந்த மார்க்கம்தான் வைதிகன் புத்ரர்கள் வைகுந்தத்திற்குப் போன மார்க்கம்" என்று எழுதப்பட்டிருப்பதும் ஒரு நிர்ப்பந்தத்தி லிருந்து நிவ்ருத்தியைத் தேடுபவர்களின் வார்த்தை போலவே இருக்கின்றதே. அப்படி அபுநராவ்ருத்தி சொல்லப்படாத மார்க்கமும் ப்ரஸ்துத வைதிக புத்ரனுடைய மார்கத்தைத் தவிர்த்து வேறு ஒன்றும் உண்டோ?

ஸ்ரீ ஸ்வாமியைத் தவிர்த்து, வேறு இரண்டு வித்வான்களும் ப்ரஸ்துத ப்ரச்நத்திற்கு ஸமாதாநம் அநுக்ரஹித்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர், வேதாந்த சிரோமணி அட்வொகெட் தேவனார் விளாகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர். அவர் எழுதுவதாவது: “ஸர்வ கர்ம நிவ்ருத்தி ஏற்பட்டா லொழிய தேஶவிஶேஷ ப்ராப்தி ஸம்பவிக்க மாட்டாது. அப்படி தேஶ விசேஷத்தை அடைந்தவர்களுக்குப் பிறகு ஒருக்காலும் ஸம்ஸார ப்ராப்தி இல்லை. வைதிகன் புத்ரர்கள் ஸர்வ கர்ம நிவ்ருத்தி பெற்றவர்க ளல்ல ராகையால், அவர்கள் ஸ்ரீ வைகுண்ட மென்னும் அப்ராக்ருத தேஶத்தை அடைந்தார்க ளென்று சொல்ல ஸாத்யமில்லை. இவர்கள் போயிருந்த தேஶம் ஸூக்ஷ்ம ஶரீரத்துடன் போகக் கூடிய கார்ய வைகுண்டமே” என்பது தான். இந்த ஸமாதாநம் பரமபதஸோபாந வாக்யங்களுக்கு விரோதிக்கின்றதே யென்றால், அந்த வாக்யங்களுக்கு அவர் வேறு விதமாக யோஜநையைச் செய் கிறார். ‘அர்ச்சிராதி கதியினால் தேஶ விஶேஷ ப்ராப்தி பெற்றவர்களல்லர்’ என்பதை ஸமுதிதமாக எடுத்துக் கொள்ளாமல், ‘அர்ச்சிராதி கதியுமில்லை, தேஶவிஶேஷ ப்ராப்தியு மில்லை’ என்று பிந்ந ஹேதுக்களாக எடுத்துக் கொண்டு, இரண்டு ஹேதுக்களையும் விவக்ஷித்து ஸ்ரீ தேசிகன் இம்மாதிரி பங்க்தியை அநுக்ரஹித்திருக்கிறார் என்பதே இவருடைய அபிப்ராயம். இப்படி யோஜிப்பதின் ஸ்வாரஸ்யா ஸ்வாரஸ்ய நிர்ணயத்தில் வித்வான்களே ப்ரமாணம்.

நிற்க: இது ந்யாயஸித்தாஞ்ஜந வாக்யத்துக்கு விருத்த மென்றும் தோன்றுகிறது.

“ப்ராக்ருதாப்ராக்ருத ஸம்ஸர்காவிநாபாவபுவ: குதஸ்த்யா ப்ராக்ருத லோகேஷு பகவதவதாரா: வாஸுதேவவ்யூஹாதிரூபேண ஸூக்ஷ்ம ஶரீரஸ்ய வைதிக புத்ராதே வா தத்கமநம் கதம் கடேத?”

என்பது அவ்விடத்திலிருக்கும் பங்க்தி. ப்ராக்ருதாப்ராக்ருத ஸம்ஸர்க்கத்தின் உபபத்தியை ஸ்தாபிக்கும் ஸ்ரீ தேசிகனுடைய திருவுள்ளம், “ப்ராக்ருதத்தில் அப்படிப்பட்ட ஸம்ஸர்க்கம் இருக்கின்றது; ஆனால் அது பரிஹார்யம்” என்பதன்றோ?

தஞ்சை தர்ம ப்ரசாரக ஸ்ரீ. உப. ஸாரம் ரங்காசார்யர் என்னும் ஸ்வாமி, ப்ரக்ருத ஶங்கைக்கு ஸமாதாநம் அநுக்ரஹித்தவர்களுள் மற்றொருவர். “வைதிகன் புத்ரர்கள் கொண்டுபோகப்பட்டிருந்த இடம் அப்ராக்ருத ஸ்ரீ வைகுண்ட லோகமன்று; அது ப்ரக்ருதி மண்டலத்திற் காணப்படும் பல விஷ்ணு லோகங்களில் அந்யதமம்” என்பதுதான் அவருடைய நிர்ணய மும். ஆனால் பரமபதஸோபாந வாக்யம், ந்யாய ஸித்தாஞ்ஜநாதிகளின் வாக்யங்கள், இவை முதலியவைகளின் விசாரத்தில் இவர் ப்ரவர்த்திக்க வில்லை. ஆதலால் பண்டிதர்கள் இவ்விஷயத்தைக் கூலங்கஷமாக விசாரித் துத் தக்க ஸமாதாநத்தை அநுக்ரஹிக்க வேண்டு மென்று ப்ரார்த்திக்கிறோம்.

18922.3

Regd. No. M. 4437.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் 1946-ஜுன் மீ௴ த்திய சந்தா வஸூலில்

13	ஸ்ரீ	S. சார்ங்கபாணி அய்யங்கார், பம்பாய்	....	3	0
59	,,	A. ரங்காசாரியர், காரைக்குடி	....	3	0
133	,,	T. ராஜகோபாலய்யங்கார், மதராஸ்	....	3	0
135	,,	T. மாணிக்க நாயக்கர், சேலம்	....	3	0
140	,,	S. பெருமாள் ரெட்டியார், ஆலந்தூர்	....	3	0
143	,,	T. K. நம்பி அய்யங்கார், மயிலாப்பூர்	....	3	0
177	,,	S. A. ராஜகோபாலையங்கார்	...	3	0
194	,,	A. S. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஆவியூர்	....	3	0
195	,,	R. ராமஸ்வாமி ஐயங்கார், கோலார்	....	2	0
224	,,	T. N. வானமாமலை அய்யங்கார், ராஜபாளையம்	...	3	0
242	,,	V. ரங்கஸாமி அய்யங்கார், ஊட்டி	...	5	0
249	,,	L. C. ஸுந்தரவரதாசாரியர், சித்தூர்	...	2	0
321	,,	R. வரதாசாரியர், சைதாப்பேட்டை	....	5	0
351	,,	M. K. ராமாநுஜாசாரியர், முகுந்தகிரி	...	3	0
373	,,	முத்துவிஜய வெங்கடாசலபதி ரெட்டியார், கூட்டேரிப்பட்டு		3	0
468	,,	M. C. துரைராஜன், மதராஸ்	....	3	0
494	,,	சேஷய்யங்கார், பொன்மலை	....	5	0
550	,,	A. S. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், மாம்பலம்	....	2	0
603	,,	T. வேதாந்தாசார்யர், மதராஸ்	....	3	0
624	,,	M. S. கோவிந்தராஜன், கோயம்புத்தூர்	....	5	0
654	,,	S. ரங்கஸாமி அய்யங்கார், நெல்லூர்	....	3	0
667	,,	V. N. ராமஸ்வாமி அய்யங்கார், உறையூர்	....	3	0
678	,,	R. ஸ்ரீநிவாஸாசாரியர், மயிலாப்பூர்	...	3	0
697	,,	N. A. நரஸிம்ஹாசாரியர், சைதாப்பேட்டை	...	1	8
732	,,	T. ஸ்ரீநிவாஸய்யங்கார், மன்னார்குடி	...	5	0
733	,,	T. பார்த்தஸாரதி, தேவக்கோட்டை	....	3	0
734	,,	A. S. ராகவாசார்யர், மன்னார்குடி	...	4	8
		ஆக மொத்தம்	....	88	0

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, Little Conjeeveram.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar. Madras.